## அலகு -1 கல்வி உளவியல், மனித வளர்ச்சி மற்றும் முன்னேற்றம்

**உளவியல்:**

இரு கிரேக்க வார்த்தைகள் கலந்து உருவாகிய செயல் தான் உளவியல் அல்லது மனவியல் ஆகும்.

Psyche+ Logos - மனதினைப் பற்றி ஆராய்தல் / படித்தல்

ஆன்மாவைப் பற்றிய விளக்கம் காலத்திற்கு ஏற்றாற்போல மாறிக்கொண்டும் மேம்பட்டுக் கொண்டும் இருக்கிறது.

உளவியல் ஓர் ஆன்மா பற்றிய அறிவியல்

உளவியல் ஒரு மனஅறிவியல்

உளவியல் ஒரு நனவுநிலை அறிவியல்

உளவியல் ஒரு நடத்தை அறிவியல்

### உளவியல்: பொருள் (Psychology: Meaning)

மனிதனின் புறச்செயல்களை உற்றுநோக்கி முறையாக ஆராய்ந்து அதன்மூலம் அவை எங்ஙனம் அகத்தே நிகழும் சிந்தனை ஓட்டங்களுடன் தொடர்பு கொண்டுள்ளன என்றும் சுற்றுச்சூழலில் ஏற்படும் நிகழ்வுகளால் எவ்வாறு பாதிக்கப்படுகின்றன என்றும் விளக்குவதே உளவியல் ஆகும்.

### உளவியல்: வரையறை (Psychology: definitions)

''உளவியல் என்பது மனிதனின் நடத்தை நடத்தையின் காரணங்கள் நிபந்தனைகள் ஆகியவற்றைப் பற்றிப் படிப்பதாகும்''- **வில்லியம் மக்டுகல்**

''உளவியல் என்பது மனிதனின் நடத்தை மனித உறவுமுறைகளைப் பற்றிப் படிப்பதாகும்''- **லெஸ்டர் குரோ மற்றும் ஆலிஸ் குரோ**

### கல்வி உளவியல் -பொருள் (Educational psychology: Meaning)

கல்வி உளவியல் என்பது மாணாக்கரின் கற்றல் என்னும் நடத்தையை திட்டமிட்டபடி செம்மைப்படுத்தி அவர்களின் ஆளுமையை மேன்மையுறச் செய்தலே ஆகும்.

### கல்வி உளவியல்- வரையறை: (Educational psychology: Define)

கல்வி உளவியல் என்பது கல்வியில் மேற்கொள்ளப்படும் செயல்முறைகளிலும் பின்பற்றப்படும் வழிமுறைகளிலும் உளவியல் கோட்பாடுகளையும் விதிகளையும் புகுத்தி

கற்றல் கற்பித்தலை மேம்படுத்துதலே ஆகும் என்று - **கோலெஸ்னிக்** என்ற அறிஞர் கூறுகிறார்.

**கல்வி உளவியலின் தேவைகள் : (Educational psychology: significance)**

- மாணவர்களுக்கிடையே காணப்படும் தனிநபர் வேறுபாடுகளைக் கண்டறிந்து அவர்களுக்கேற்ற கற்பித்தல் முறைகளை ஆசிரியர் தேர்ந்தெடுக்க கல்வி உளவியல் துணைபுரிகிறது.
- கற்றலில் ஏற்படும் இடையூறுகளைக் கண்டறிந்து அவற்றை நீக்க கல்வி உளவியல் அறிவு தேவைப்படுகிறது.
- மாணவர்களது பொருத்தப்பாடற்ற நடத்தையைக் கண்டறிந்து அதற்கான அடிப்படைக் காரணங்களை இனம் கண்டு அதனை நீக்கி ஆளுமை வளர்ச்சியைச் செம்மைப்படுத்த கல்வி உளவியல் உதவுகிறது.
- வகுப்பறை ஒழுங்கை நிலைநாட்ட கல்வி உளவியல் உதவுகிறது.
- மாணவர்களது மனநலத்தை மேம்படுத்தவும் பிரச்சனைக்குரிய மாணவர்கள் தங்களது பிரச்சனைக்கு தீர்வு காண வழிகாட்டவும் அறிவுரை பகரவும் கல்வி உளவியல் பயன்படுகிறது.
- மாணவர்களின் கல்வி அடைவை மதிப்பிட உளவியல் அடிப்படையிலான பல்வேறு சோதனைகளை செயல்படுத்தி அளவீடுகளைப் பெற்று பொருள் உணர ஆசிரியர்களுக்கு கல்வி உளவியல் துணைபுரிகிறது.
- வகுப்பறைக் கற்பித்தலில் மாணவர்களுக்கு ஊக்கம் அளித்திடும் வழிமுறைகளையும் மாணவர்களது கவனத்தை ஈர்த்து வகுப்பறை கற்பித்தலில் திறன் மிக்கவராகத் திகழும் வழிமுறைகளையும் கல்வி உளவியல் மூலம் நாம் பெற முடியும்.
- மாணவர்களது நாட்டங்களை அறிந்து ஊக்குவிக்கவும் பரிசு பாராட்டு தண்டனைகளை முறையாகச் செயல்படுத்தி விரும்பத்தக்க கற்றலை வலுப்படுத்தும் வழிமுறைகளை கல்வி உளவியல் அளிக்கிறது.

**கல்வி உளவியலின் வரம்பு : (Scope of Educational Psychology)**

**ப்ளேர் ஜோன்ஸ் சிம்ப்சன்** போன்றோர் கல்வி தத்துவியல் எதைக் கற்பிக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்ட கல்வி உளவியல் அதை எப்படிக் கற்பிக்க வேண்டும் என்று இயம்புகிறது. கல்வி உளவியல் கற்றல் கற்பித்தலில் பின்பற்ற வேண்டிய வழிமுறைகளையும் செயல்பாடுகளையும் பற்றியே ஈடுபாடு கொள்கிறது.

1.கோலஸ்னிக் கருத்துப்படி கல்வி உளவியலின் உட்கூறுகளாவன:

- மாணாக்கரிடையே காணப்படும் தனியாள் வேறுபாடுகள்
- ஊக்கம்
- கற்பித்தல் முறைகள்

- மதிப்பிடும் முறைகளும் அவற்றின் நிறை – குறைகளும்
- வகுப்பறை மேலாண்மை
- மனநலம்
- ஒழுக்கத்தை உருவாக்குதல்

2.**எச்.சி.லிண்ட்கிரேன்** கருத்துப்படி கல்வி உளவியலின் பாடப்பொருட்கள் கற்றல் - கற்பித்தல் என்னும் செயல்பாட்டின் 5 முக்கிய கூறுகளாவன:

- கற்பவர்
- கற்கும் முறைகள்
- கற்கும் அனுபவங்கள்
- கற்கும் சூழ்நிலைகள்
- கற்பிப்பவர்

**வளர்ச்சி**

ஒரு உயிரியின் உருப்பெருக்கம் அல்லது அளவு அதிகரித்தலை **வளர்ச்சி** என்கிறோம். ஒரு குழந்தை வளர்ச்சியடையும் போது அதன் உயரம், எடை, மொத்த கனபரிமாணம் ஆகியவை அதிகரிக்கின்றன.

**முன்னேற்றம்**

ஒரு உயிரியின் உருவத்திலோ அமைப்பிலோ ஏற்படும் மாற்றங்களையும் அது இயங்கும் விதத்தில் ஏற்படும் மேம்பாடுகளையும் ஒட்டுமொத்தமாகக் குறிப்பதே **மேம்பாடு** அல்லது **முன்னேற்றம்** ஆகும்.

**வளர்ச்சியின் இயல்புகள்**

1 உயிரினங்களுக்கு மட்டும் உரிய ஒரு சிறப்புப் பண்பு
2 வளர்ச்சியின் வேகம் உயிரினங்களுக்கேற்ப வேறுபடக் கூடியது.
3 வளர்ச்சியின் பொழுது உயிரினத்தின் அளவும் எடையும் அதிகரிக்கின்றது.
4 வளர்ச்சி புறத்தன்மையானது.
5 ஒரு குழந்தையின் உடலின் வெவ்வேறு பகுதிகளின் வளர்ச்சி விகிதம் மாறுபடக்கூடியது.
6 வளர்ச்சி வேகம் வளர்ச்சிக்காலம் முடியும் வரை ஒரே சீராக இருப்பதில்லை
7 ஒவ்வொரு பகுதியின் வளர்ச்சியும் குறிப்பிட்ட விதிகளுக்குட்பட்டே நிகழ்வதாகும்.
8 வளர்ச்சி மரபினால் தீர்மானிக்கப்படுகிறது.
9 முன்னேற்றத்தின் ஓர் உட்கூறுதான் வளர்ச்சி.

**மேம்பாடு /முன்னேற்றத்தின் இயல்புகள்**

1 உயிரின வளர்ச்சி, முதிர்ச்சி, அனுபவங்கள் இவைகளின் விளைவாக நிகழும் அகமாற்றம் முன்னேற்றம் எனப்படும்.
2 முன்னேற்றம் தொடர்ச்சியானது. வாழ்வின் இறுதிவரை நிகழ்வது.
3 முன்னேற்றம் பன்முகம் கொண்டது.
4 முன்னேற்றம் நேர்கோட்டில் அமைவதில்லை.
5 முன்னேற்றம் தரத்தோடு தொடர்புடையதால் நேரடியாகத் துல்லியமாக அளவிட முடியாது.
6 முன்னேற்றம் காலவரையறையும் எல்லையும் அற்றது.
7 முன்னேற்றம் வரிசைக்கிரகமானதும், திசையுடைய மாற்றமும் கொண்டது.

**வளர்ச்சி, முன்னேற்றக் கோட்பாடுகள்**

- முன்னேற்றம் ஒரு தொடர்ச்சித்தன்மை கோட்பாடு
- தனியாள் வேறுபாட்டுத்தன்மை கோட்பாடு
- வளர்ச்சியும் முன்னேற்றமும் ஒரே சீராக அமைவதில்லை
- முன்னேற்றம் வரிசைக்கிரகமாக நிகழ்கிறது.
- முன்னேற்றம் என்பது பொதுமைத்துலங்களில் ஆரம்பித்து குறிப்பிட்ட சிறப்புத்துலங்களில் நிறைவடைகிறது.
- மரபு மற்றும் சூழ்நிலை இடைவினைக் கோட்பாடு
- யூகித்தல் கோட்பாடு
- வெவ்வேறு விகிதங்களில் வளர்ச்சியடைதல் கோட்பாடு
- முன்னேற்றம் உள்தொடர்புடையது
- ஆண், பெண் வளர்ச்சியில் வேறுபாடு கோட்பாடு

**வளர்ச்சி முன்னேற்றத்திற்கான வேறுபாடுகள்**

| வ.எண் | வளர்ச்சி | முன்னேற்றம் / மேம்பாடு |
|---|---|---|
| 1 | வளர்ச்சி உருப்பெருக்கத்தால் விளைவதால் துல்லியமாக அளக்கமுடியும் | உயிரியின் அமைப்பிலும் செயல்பாட்டிலும் ஏற்படும் மாற்றங்களையும் அது இயங்கும் விதத்திலும் முன்னேற்றம் ஏற்படுகிறது. |

| | | |
|---|---|---|
| 2 | வளர்ச்சியை புறவயத் தன்மையோடு உற்றுநோக்கி துல்லியமாக அளக்க முடியும். | முன்னேற்றம் தரத்தோடு தொடர்புடையதால் துல்லியமாக அளவிட முடியாது. |
| 3 | வாழ்நாள் முழுவதும் வளர்ச்சி தொடர்வதில்லை. பூப்பெய்தியவுடன் வளர்ச்சி நின்றுவிடுகிறது. | முன்னேற்றம் வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து ஏற்படக் கூடியது. |
| 4 | முன்னேற்றத்தின் ஓர் உட்கூறுதான் வளர்ச்சி | முன்னேற்றம் சிக்கலான செயல்பாடு ஆகும். பன்முகம் கொண்டது. |
| 5 | உடலின் பல பாகங்களில் வளர்ச்சி ஏற்படுகிறது. | உயிரியின் இயக்கத்தில் ஏற்படும் ஒட்டுமொத்த மாறுபாடே முன்னேற்றம் ஆகும். |
| 6 | வளர்ச்சி குறிப்பிட்டதிசையைக் கொண்டதல்ல | முன்னேற்றம் வரிசைக்கிரமமானதும், திசையையுடைய மாற்றமும் கொண்டது. |
| 7 | வளர்ச்சி விகிதம் வாழ்க்கையின் எல்லாப் பருவங்களிலும் ஒரேசீராக இருப்பதில்லை | முன்னேற்றவிகிதம் வாழ்க்கையின் எல்லாப் பருவங்களிலும் ஒரேசீராக அமைவதில்லை. |
| 8 | வளர்ச்சியில் தனியாள் வேறுபாடுகள் காணப்படுகின்றன | பல்வகை முன்னேற்றங்களில் உடல் , அறிவு, ஒழுக்கம், சமூகஉணர்வு, மனவெழுச்சி போன்றவை குழந்தைகள் ஒருவருக்கொருவர் மாறுபடுகின்றனர். |
| 9 | வளர்ச்சி மரபினால் பெரிதும் தீர்மானிக்கப்படுகிறது. | கற்றலும், அனுபவங்களும் முன்னேற்றத்தைத் தீர்மானிப்பதில் பெரும்பங்கு வகிக்கின்றன. |
| 10 | வளர்ச்சி முன்னேற்றத்திற்கு வழிகோலாக அமையலாம் துணைபுரியாமலும் போகலாம் | பல்வகை முன்னேற்றங்களும் ஒருங்கிணைந்து காணப்படுகின்றன. |

**மரபு**

ஒரு குழந்தை உருவாகும் போது தனது பெற்றோரிடமிருந்து நேரிடையாகப் பெறப்படும் உடற்கூறு பண்புகள் **மரபு** என்றழைக்கப்படுகிறது.

**சூழ்நிலை**

ஒருவனுடைய **சூழ்நிலை** என்பது அவன் பிறந்தது முதல் இறக்கும் வரை அவனைச்

சுற்றி இருக்கும் பல்வேறுவிதமான தூண்டல்களின் தொகுப்பாகும்.

**மரபுக்கூறுகள் கடத்தப்படும் விதம்**

பெற்றோர்களின் உயிரணுகலப்பினால் குழந்தை உருவாகிறது. சினைமுட்டைவிந்தணுவைப் போன்று 8500 மடங்குபெரியது. ஓவ்வொரு உயிரணுவிலும் 23 ஜோடிகுரோமசோம்கள் காணப்படுகிறது. ஒவ்வொரு குரோமசோமிலும் 20000 முதல் 42000 வரை பாசிமணி போன்ற அமைப்புகள் காணப்படுகின்றன. இவற்றிற்கு ஜீன்கள் என்றுபெயர். இவையே மரபுக் கூறுகளை உருவாக்குகின்றன.

பெண்செல்லின் 23ஜோடி குரோமசோம்கள் ஆண் செல்லின் எந்த 23 குரோமசோம்களுடன் இணைகின்றன என்பது வாய்ப்புக் கோட்பாடு எனவே ஒரே பெற்றோருக்குப் பிறக்கக்கூடிய எந்த இரண்டு குழந்தைகளும் ஒரேமாதிரியாக இருப்பதில்லை.

ஒருகுழந்தையின் குணநலன்களில் அதன் 8 தலைமுறை மூதாதையர்களின் தாக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது. ஒருகுழந்தை தன் பெற்றோரிடமிருந்து½பங்கும் தாத்தாபாட்டியிடம் ¼பங்கும் மூதாதையர்களிடமிருந்து 1/8பங்கும் மரபுக்கூறுகளைப் பெற்றுள்ளது.

**இருகரு இரட்டையர்கள்**

பெண்ணின் இரு சினைப்பைகளிலிருந்தும் ஒரே சமயத்தில் சினைமுட்டைகள் வெளியேறி கருப்பையை அடைந்து முன்னேறிவரும் இரண்டு விந்தணுக்களால் தனித்தனியாகக் கருவுறுகின்றன. இதன் விளைவாக இரண்டு கருமுட்டைகள் தோன்றி இரட்டைக் குழந்தைகள் பிறக்கின்றன. இவை இரண்டும் ஆணாகவோ, இரண்டும் பெண்ணாகவோ, அல்லது ஒன்று ஆணாகவும் மற்றொன்று பெண்ணாகவும் அமையலாம்.

**ஒருகரு இரட்டையர்கள்**

ஒரேயொரு சினைமுட்டையுடன் ஒரு விந்தணு கூடி கருவுறுதல் நிகழ்ந்து கருமுட்டைதோன்றி சிலநாட்களுக்குப் பிறகு இரண்டாகப் பிளந்து ஒவ்வொன்றும் தனியான முழுமையான கருவாகமாறி ஒட்டிப்பிறக்கும் இரட்டையர்களாக உருவாகின்றனர். இவ்வாறு பிறக்கும் இரட்டையர்களுக்கு ஒருகரு இரட்டையர்கள் என்று பெயர். இவர்கள் ஒரே பாலினத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பர். இவர்களின் மரபு முற்றிலும் சமமாக இருக்கும்.

**குழந்தையின் வளர்ச்சியில் மரபு மற்றும் சூழ்நிலையின் தாக்கம்:**

- மனிதனின் இயல்பிற்கும் வளர்ப்பிற்கும் உள்ள தொடர்பு மரபுக்கும் சூழ்நிலைக்கும் உள்ள தொடர்பேயாகும். ஒரு குழந்தையின் திறன்களையும் உளவியல் நடத்தைகளையும் மரபும் சூழ்நிலையும் இணைந்தே தீர்மானிக்கின்றன.

- **மக்கைவர்** மற்றும் **பேஜ்** ஆகியோர் வாழ்வின் ஒவ்வொரு செயலும் மரபு சூழ்நிலை இவைகளின் விளைவு என்று கூறுகின்றனர்.

- மரபு சூழ்நிலை இவை இரண்டில் மரபுப் பண்புகள் மாற்ற முடியாதவை, சூழ்நிலை பெரும் மாற்றத்திற்குட்பட்டது.

**மரபுவாதிகளின் கருத்தின்படி,** குழந்தைகள் எவ்வளவு நல்ல சூழ்நிலையில் வளர்ந்தாலும் மரபுப்பண்புகள் தான் அவர்களது நடத்தையைத் தீர்மானிக்கின்றன. மரபுப்பண்புகளே வளர்ச்சியை மேம்பாட்டினைத் தீர்மானிக்கின்றன.

**மரபின் முக்கியத்துவத்தைஉணர்த்தும் ஆய்வுகள்**

**1.கால்டன்** மேற்கொண்ட ஆய்வில் 800 ஆங்கில குடும்பத்தில் தோன்றிய 977 மேதைகளை கண்டறிந்தனர். பின் அவர்களது உறவினர்களை ஆராய்ந்தபொழுது அவர்களில் 537 பேர் புகழ் மிக்கவர்களாகவும், திறமை வாய்ந்தவர்களாகவும் சராசரி குடும்பத்தைச் சேர்ந்த நபர்களை தேர்ந்தெடுத்து அவர்களின் உறவினர்கள், முன்னோர்களை ஆராய்ந்த போது 4 பேர் மட்டுமே புகழ்மிக்கவர்களாக இருந்தனர் என்பது தெரிய வந்தது எனவே மேதைகள் மேதைகளிடமிருந்து தோன்றுகின்றனர் என்றும் இதற்கு மரபுநிலையே காரணம் என தன்ஆய்வு முடிவில் கூறுகிறார்.

**2.கட்டார்டு** அவர்கள் காலிகாக் என்ற போர்வீரனின் பரம்பரை வழித்தோன்றல்களை பற்றி ஆராய்ந்தார். காலிகாக் என்ற போர் வீரனுக்கு மனவளர்ச்சி குன்றிய ஒரு மனைவியும், சாதாரண பெண் ஒருத்தியும் மனைவியாக இருந்தனர். இவர்களின் பரம்பரை வழித்தோன்றல்களை கட்டார்டு ஆய்வு செய்தார். முனவளர்ச்சி குன்றிய மனைவியின் நேரடி வழித்தோன்றல்கள் 480 நபர்களில் 48 பேர்களே சாதாரணமாகவும் 432பேர் குற்றவாளிகளாகவும் மனவளர்ச்சி குன்றியவர்களாகவும் இருந்தனர். ஆனால் சாதாரண மனைவியின் வழித்தோன்றல்களில் 49 சதவீதம் சாதாரணமான ஆண்களாகவும் பெண்களாகவும் இருந்தனர் என்று தனது ஆய்வு முடிவில் கூறியுள்ளார் அதனால் குழந்தைகளின் வளர்ச்சியை மரபு தான் தீர்மானிக்கிறது என்பது கட்டார்டு என்பவரின் கருத்தாகும்.

**சூழ்நிலைவாதிகளின் கருத்தின்படி**

- சூழ்நிலையே ஒருவனது வளர்ச்சியின் இயல்பின் அடிப்படை.
- மனித வளர்ச்சி சூழ்நிலையைப் பொறுத்தது. மரபுப் பண்புகள் பங்குபெறுவதில்லை.

- நல்ல சூழ்நிலையும் வாய்ப்பும் தரப்பட்டால் எவராலும் வெற்றி பெறமுடியும்.
- சூழ்நிலை சாதகமானால் நல்ல வளர்ச்சியும் மேம்பாடும் ஏற்படும் இதில் மரபிற்கு எவ்வித பங்கும் இல்லை.
- ஒருவனின் அனுபவம், பயிற்சி இவைகள் முற்றிலும் சூழ்நிலையைச் சார்ந்தது. ஒருவனை உருவாக்குகிறது.

**சூழ்நிலையின் முக்கியத்துவத்தைஉணர்த்தும் ஆய்வுகள்**

**1.அமலா விமலா** என்று இரண்டு சகோதரிகள் இருந்தனர். இவர்களில் அமலாவின் வயது 2. கமலாவின் வயது 9. இவர்கள் 1920 -ல் வங்காளத்தில் உள்ள ஒரு காட்டில் ஓநாயினால் கடத்திச் செல்லப்பட்டனர். ஓநாய்களால் கடத்திச் செல்லப்பட்டு வளர்க்கப்பட்ட அமலா விமலா என்னும் பெண்குழந்தைகள் மீட்கப்பட்டு மனித சூழ்நிலைக்கு திரும்பிய பின்னரும் கூட ஓநாய்கள் போன்றே நான்கு கால்களால் நடந்தும் பற்களால் உணவுப் பொட்டலத்தை கிழித்து உட்கொண்டும் வந்தனர். 2 வயதுடைய அமலா இறக்க 9 வயதுடைய கமலா மட்டும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று பயிற்சிகளின் மூலம் மனிதர்களைப் போன்று நடக்கவும் உணவு உட்கொள்ளவும் ஆரம்பித்தாள். இச்சம்பவம் மனித ஆளுமை வளர்ச்சிக்கு சமூக கலாச்சார சூழ்நிலை எவ்வளவு இன்றியமையாதது என்பதை எடுத்துக்காட்டுகிறது.

**2.** மனிதர்களிடையேயும் கூட மரபுக் கூறுகளால் தீர்மானிக்கப்படும் குணநலன்களில் ஒன்றான உயரம் சூழ்நிலைத்தாக்கத்தால் மாறுதல்களுக்கு உள்ளாவது கண்டறியப்பட்டுள்ளது. அமெரிக்காவின் கலிபோர்னியா கடற்கரையோரம் பல தலைமுறைகளாக வாழ்ந்து வரும் சீனர்கள் தங்களுக்கிடையே மட்டும் திருமணஉறவு கொண்டு வாழ்ந்த போதிலும் அவர்களின் உயரம் சீனாவில் வாழும் சீனர்களின் சராசரி உயரத்தை விட அதிகமாகவே காணப்படுகிறது.

**3.அயோவா பல்கலைக்கழக** சோதனையில் ஒரே மரபைப்பெற்றுள்ள ஒருகரு இரட்டையரில் ஒருவருக்கு நர்சரிபள்ளிக்கல்வி அளிக்கப்பட்டது. மற்றொரு குழந்தைக்கு அவ்வித பயிற்சி ஏதும்அளிக்கப்படாத போது பயிற்சி பெற்ற குழந்தையே கல்வி அடைவில் தேர்ச்சி பெற்றுத் திகழ்ந்தது.

**மரபா சூழ்நிலையா?**

- ❖ நல்ல மரபுப்பண்பின் வழிவந்த குழந்தைகள் நல்ல சூழ்நிலை வாய்ப்பு அளிக்கப்பட்டால் நல்ல குழந்தைகளாக வளர்ச்சியடைகின்றனர் இல்லையேல் எதிர்நோக்கில் வளர்கின்றனர்.

❖ மரபுப்பண்புகளின் நடத்தையில் பழக்க வழக்கத்தில் புறம்பட்டவர்களின் குழந்தைகளுக்கு நல்ல சூழல் மற்றும் வாய்ப்பு பயிற்சியளிக்கப்பட்டால் அவர்களும் நாம் விரும்பும் நல்ல வளர்ச்சியைப் பெறுகின்றனர்.

❖ குழந்தைகள் பெற்றோரை ஒத்திருப்பதற்கு காரணம் மரபு. திறனிலும் நடத்தையிலும் அறிவிலும் வேறுபட்டிருப்பதற்குக் காரணம் சூழ்நிலை. தனிநபர் வேறுபாடுகளுக்கும் முக்கியமான காரணம் சூழ்நிலையேயாகும். எனவே மரபுக்கும் சூழ்நிலைக்குமான தொடர்பு முக்கிய பங்கு வகிக்கிறது.

❖ மரபு என்பது இணைக்கப்பட்ட திறனாகும். சூழ்நிலை ஒருவனின் திறன்களின் முழுவளர்ச்சியைத் தூண்டுகின்றன. நல்ல வளமான மாணவர்களைதத் தூண்டக்கூடிய வகுப்பறைச் சூழல் அளித்தால் மாணவர்கள் திறம்படவும் நல்ல விளைவுடனும் கற்க முடியும்.

❖ ஆகையால் மரபு சூழ்நிலை இவை இரண்டும் இடைவினையாற்றி ஒரு குழந்தையின் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டினை தீர்மானிக்கின்றன.

**கல்வியில் மரபு மற்றும் சூழலின் தாக்கம்**

- ஒரு குழந்தை மரபுக்காரணிகளால் தீர்மானிக்கப்பட்ட குறிப்பிட்ட சில திறன்களையும் பண்புகளையும் பெற்றுப் பிறந்தாலும் அத்திறன்கள் ஒளிர்விட சாதகமான சூழ்நிலை தேவை.

- அதிக நுண்ணறிவு மரபுக் கூறுகளோடு பிறக்கும் ஒரு குழந்தை புலன் உணர்வு தூண்டல்கள் குறைந்த அளவே உள்ள சூழ்நிலையில் வளர்ந்தால் அதன் நுண்ணறிவு மிகவும் குறைந்தே காணப்படும் எனவே குழந்தையின் வளர்ச்சிக்கு உகந்த சிறப்பான சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டியது பெற்றோர் மற்றும் ஆசிரியர்களது கடமையாகும்.

- ஒவ்வொரு மாணவனின் உள்ளார்ந்த ஆற்றல்களையும் திறன்களையும் முழுமையாக வெளிப்படுத்தி அதிகரிக்கச் செய்ய ஆசிரியர்கள் முயற்சி செய்ய வேண்டும்.

**வளர்ச்சி முன்னேற்றம் ஆகியவற்றின் அம்சங்கள்: (Dimensions of human growth and development: Physical, cognitive, emotional, social, moral and language)**

**உடல்வளர்ச்சி:**

உடல் வளர்ச்சியில் உடற்கூறு வளர்ச்சி உடலியல் வளர்ச்சி என இரு கூறுகள் உள்ளன. எலும்புக்கூட்டின் வளர்ச்சி எலும்பின் தன்மையில் வளர்ச்சி உடலின் உயரம் எடை

ஆகியவற்றில் மாற்றம் போன்றவை உடற்கூறு வளர்ச்சியாகும். உடலின் பல்வேறு தொழில் பகுதிகளான இரத்த ஓட்டப்பகுதி நரம்பு மண்டலம் சுவாச மண்டலம் தசைகளின் தொகுதி போன்றவற்றில் எழும் மாற்றங்கள் உடலியல் வளர்ச்சி எனப்படும்.

**மனவளர்ச்சி:**

இது அறிவுத்திறனின் பல்வேறு கூறுகளான கற்பனை செய்தல் சிந்தித்தல் ஆராய்ந்தறிதல் புலன்காட்சி நினைவிலிருத்தல் வேறுபடுத்துதல் பொதுமைப்படுத்துதல் தொடர்புபடுத்துதல் ஆகியவற்றைக் குறிக்கிறது.

**மனவெழுச்சி வளர்ச்சி:**

குழந்தை பிறப்பின்போது இருக்கும் பொதுமனவெழுச்சியான பொதுவான பரப்பிலிருந்து படிப்படியான

வளர்ச்சி மூலம் பயம் கோபம் மகிழ்ச்சி துக்கம் அன்பு கருணை அருவருப்பு போன்ற பல்வேறு மனவெழுச்சிகள் அமையப் பெற்று இவற்றை பொருத்தமான நேரத்தில் வெளிப்படுத்தக்கற்று பிறகு முதிர்ச்சி நிலையை அடைதலே மனவெழுச்சி வளர்ச்சி ஆகும்.

**சமூக வளர்ச்சி:**

சமூகத்தில் பிறருடன் தொடர்புகொண்டு இணக்கமான முறையில் பழகத் தேவைப்படும் திறன்கள் மெதுவாக வளர்ச்சி பெறுதல் சமூகவளர்ச்சி எனப்படும்.

**ஒழுக்க வளர்ச்சி:**

சமூக அறநெறிகளை அறிந்து அதன்படி ஒட்டஒழுகல் ஒழுக்க வளர்ச்சி எனப்படும். எது சரி எது தவறு என்று பிரித்தரியும் திறனைப் பெற்று தனக்கென ஒழுக்கக்கோட்பாட்டை அமைத்துக் கொள்ளல் ஒழுக்க வளர்ச்சி எனப்படும்.

**குழவிப்பருவத்திலிருந்து குமரப்பருவம் வரையிலான உடல்வளர்ச்சி போக்கு:**

**குழவிப்பருவம்:**

குழந்தை பிறந்தவுடன் சுமார் 50 செ.மீ நீளமும், 2.5கிலோ எடையும் இருக்கும் குழந்தையின் தலைக்கும் உடம்புக்கும் உள்ள விகிதம் 1:4 என்பதிலிருந்து 1:8 என்று மாறும். ஆதிகம் பயன்படுத்தப்படுவதால் கை கால்கள் நீளத்தில் அதிகரிக்கின்றன.

குழந்தையின் மூளை வளர்ச்சியும் விரைவாக அமைகிறது. 4 முதல் 6 வயதுக்குள் மூளையின் எடை 80 % ஐ எட்டுகிறது. 8 வயதிற்குள் அது 93% ஆக மாறுகிறது. ஆறு மாதத்திற்குப் பின் பற்கள் முளைக்கத் தொடங்குகின்றன. நரம்புகள் குறிப்பிடத்தக்க வளர்ச்சியைப் பெற்றிருக்கும்.

**குழவிப்பருவம்:**

குழவிப்பருவத்தில் கேட்கும் திறனே முழு வளர்ச்சியை எட்டுகிறது. குழந்தையின் துரிதமான

உடல் வளர்ச்சிக்கு முதலில் தாய்ப்பாலும் அது அன்பு அரவணைப்போடு கொடுக்கப்படுதலும் அவசியம். சுகாதாரமான சூழ்நிலையும் போதுமான உறக்கமும் நிறைவான புலன் தூண்டல்களும் மிகவும் இன்றியமையாதவை.

**பிள்ளைப்பருவம்:**

பால் பற்கள் விழுந்து உறுதியான நிலைத்த பற்கள் முளைக்கும். இதயம் நுரையீரல் போன்றவை வளர்ச்சி பெறும். தசைகள் இறுகி எலும்புடன் வலுவாகப் பொருந்தியிருக்கும்.

**குமரப்பருவம்**:

உடல் வளர்ச்சி மிக வேகமாக அமைந்து பின் குமரப்பருவத்தில் உச்சநிலையை அடைகிறது. உடலியக்கச்செயல்களான கண்களைக் சுழற்றுதல், தலையைத் திருப்புதல், உட்கார்தல், எழுந்திருத்தல், ஓடுதல், குதித்தல் நல்ல முன்னேற்றம் ஏற்படும். புலனியக்கச் செயல்களான பொருட்களை நேர்த்தியாகக் கையாளுதல், கண், கை இணக்கம், செயல்பாடு, இலக்கை நோக்குதல், இயக்கங்களை துல்லியாக கட்டுப்படுத்துதல் போன்றவற்றிலும் முழுமையான வளர்ச்சி ஏற்படுகிறது.

**குழவிப்பருவம் முதல் குமரப்பருவம் வரை மனவளர்ச்சி:**

**குழவிப்பருவம்:**

குழந்தையின் உளத்திறன் வளர்ச்சி பெற்றிராது. பல்வேறு உளத்திறன்களின் மூளைச் செயல்மையங்கள் முதிர்ச்சியடையத் தொடங்கும். ஏழெட்டு மாதக் குழந்தை சிறு சொற்களைக் குழறி சொல்லப்பழகுகிறது. முதல் இரு ஆண்டுகள் பொருள்களையும் மனிதர்களையும் நன்கு புரிந்து கொள்கிறது.

**பிள்ளைப்பருவம்:**

மூன்று வயதில் கற்பனைத்திறன் உருவாகி விளையாட்டுகளில் பிரதிபலிக்கத் தொடங்குகிறது. இப்பருவத்தில் மொழியறிவு வேகமாக வளர்ச்சியடைடம் அதன் வாயிலாக அறிதிறன் ஆற்றல்கள் பெருகும் பிள்ளைப்பருவத்தில் கீழ்கண்ட செயல்கள் நன்கு வளர்ச்சி பெருகும். அவை இணைத்தல் பிரித்தல் பெருக்குதல் வகுத்தல் திருப்புதல் பிரதியிடுதல் போன்றன.

**குமரப்பருவம்:**

அறிவுத்திறன் வளர்ச்சி எல்லா வகையிலும் முதிர்ச்சியடைவது குமரப்பருவத்தில் தான் தர்க்க முறையில் சிந்திக்கவும் கற்பனைகளை வளர்த்துக்கொள்ளவும் ஆற்றல் பெருகுகிறது. சிந்தனைகள் புதிய வடிவம் பெருகுகின்றன. பிரச்சனையை ஆராய்ந்து தீர்வு காணும் திறன் பெருகுகிறது.

நல்ல ஆளமை பண்புகள் முளைவிடுவதும் கலையார்வம் ஏற்படுவதும் கலைஞர்களாக

கவிஞர்களாக உருவெடுப்பதும் இப்பருவத்தில் தான்.

**குழவிப்பருவம் முதல் குமரப்பரும் வரையிலான மனவெழுச்சி வளர்ச்சி:**

நகை, அழுகை, அச்சம், சினம், உவகை, வியப்பு, அவமானம், அன்பு போன்றவை மனிதன் வெளிப்படுத்தும் உணர்ச்சிகளாகும். இவை அடிப்படை மனவெழுச்சிகள் என்கிறோம்.

**குழவிப்பருவம்:**

பிறந்த சில வாரங்கள் வரை பொதுப்படையான உள்ளக்கிளர்ச்சியாக குழவியின் மனஎழுச்சி வெளிப்படுகிறது. மூன்று அல்லது நான்கு மாதங்களுக்குள் இந்த உள்ளக் கிளர்ச்சி சினம் அச்சம் அன்பு என்ற மூன்று அடிப்படை மனஎழுச்சிகளாகப் பிரிகிறது. குழவியின் சுதந்திரமான உடலியக்கத்தில் ஏதேனும் குறுக்கீடு ஏற்பட்டால் சினம் கொள்கிறது. தன் உடல் வேட்கை நிறைவேறிய போதும் தன்னை மெதுவாக தட்டி அரவணைக்கும் போது அது அன்பை வெளிப்படுத்தும். குழவி பருவத்தின் இறுதி கட்டத்தில் மனவெழுச்சி வெளிப்படும் முறைகளிலும் மாறுதல்கள் ஏற்படுகின்றன.

**பிள்ளைப்பருவம்:**

இப்பருவத்தில் மனவெழுச்சியைத் தூண்டக்கூடிய அனுபவங்களின் எண்ணிக்கை பெருகுகிறது. மனவெழுச்சிகளில் ஓர் இருமுகப் போக்குநிலை தோன்றுகிறது. என்கிறார் பிராய்டு. சிறுகுழந்தைஆணாக இருப்பின் தன் தாயின் மீது அதிக அன்பு காட்டுகிறது. தந்தையிடம் இவ்விரு எதிர்பட்ட மனஎழுச்சிகள் ஒரே சமயத்தில் தோன்றுகின்றன. இம்மனவெழுச்சி பிற்காலத்தில் ஆளுமையை பெரிதும் பாதிக்கவல்லன என உளப்பகுப்பாளர்கள் கருதுகின்றனர்.

**குமரப்பருவம்:**

மனஎழுச்சிகள் புயலாய் வெளிவரும் பருவம் என குமரப்பருவத்தில் மன எழுச்சிநிலை மாறிக் கொண்டேயிருக்கும். உடல் வழு அதிகரிப்பதால் உடல்இயக்கச் செயல்பாடுகளும் பெருகுகின்றன. மனக்கிளர்ச்சியால் தாக்கப்படுவதால் இப்பருவத்தினர் அதிகாரப் பீடத்தை முழுமூச்சாக எதிர்ப்பர். அதிக தோல்வி ஏற்படும்போது விரத்தியும் வெறுப்பும் வெளிப்படுத்துவர். குமரப்பருவத்தினர் சிலர் கலைகள் மிக்க உடையவர்களாகக் கலைப்பைத்தியம் போல அலைவர். புகதிகளில் மோகம் கொண்டவர் புதியன படைக்கும் ஆர்வத்தினர்களால் அதே சிந்தனைகளில் முழு கவனமும் கொள்வர்.

**குழவிப்பருவம் முதல் குமரப்பருவம் வரையிலான ஒழுக்க வளர்ச்சி:**

சமூக வளர்ச்சியும் ஒழுக்க வளர்ச்சியும் இணைந்தவை. ஓழுக்க வளர்ச்சியில் நான்கு நிலைகளை உளவியலாளர் குறிப்பிடுகின்றனர்.

**பட்டறி நிலை:**

பட்டறி நிலை என்பது அனுபவநிலை என்று கூறலாம். இந்நிலையில் மகிழ்ச்சி துன்பம் என்பவற்றை மற்றவர்களிடமிருந்து குழந்தை அனுபவ ரீதியாக அறிந்துகொள்கிறது. மகிழ்ச்சி தரும் செயல்களில் குழந்தைகள் ஈடுபடுவர். துன்பம் தரும் செயல்களைத் தவிர்ப்பர்.

**ஆதிக்க நிலை:**

ஆதிக்க நிலை அல்லது ஆளப்படு நிலை என்ற நிலையில் பெற்றோர் ஆசிரியர்களின் சொற்படி குழந்தை நடக்கத் தொடங்குகிறது.

**சமூகநிலை:**

இந்நிலையில் சமூகப் பழக்க வழக்கங்களால் அதன் நடத்தை பாதிக்கப்படுகிறது.

**தனித்த நிலை:**

தனித்த நிலை உள்ளவனின் நடத்தை அவன் கொண்டுள்ள உயிர் ஒழுக்கம் பற்றிய குறிக்கோள்களால் உந்தப்படுவதாகும். இந்நிலையில் உள்ளவன் சமூகமே திரண்டு வந்து எதிர்த்த போதிலும் தான் உறுதியாக நம்பும் அறநெறிகளிலிருந்தும் பிறழமாட்டான்.

**குழவிப்பருவம் முதல் குமரப்பருவம் வரையிலான சமூக வளர்ச்சி:**

**ஹர்லாக்** என்பவரது கருத்துப்படி சமூக வளர்ச்சி என்பது சமூகத்தொடர்புகளில் முதிர்ச்சி பெறுதல் என்பதே. குழந்தைகளிடம் சமூகவியல்பு வளர்ச்சியை ஏற்படுத்துதலையே சமூகநெறிப்படுத்தும் செயல்முறை என்பர். சமூகத்தின் சட்ட திட்டங்களை மதித்து நடக்கும் பண்பைக் கற்றலையே சமூக வளர்ச்சிஎன்கிறோம்.

**குழவிப்பருவம்:**

சிறுகுழந்தைக்கு தன்னுணர்ச்சி அதிகம். குடும்பத்தின் மையமாக அது தன்னைக் கருதுகிறது. குடும்பத்தில் பிறர் இருப்பது தனது தேவையை நிறைவுசெய்ய என்ற எண்ணம் அதன் மனதில் காணப்படுகிறது. சிறுகுழந்தையின் சமூகவளர்ச்சி அதன் உடல் வளர்ச்சியுடனும் அறிவு வளர்ச்சியுடனும் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது.

**பிள்ளைப்பருவம்:**

பிள்ளைப்பருவத்தில் தான் கூட்டுணர்ச்சி முதிர்ச்சி பெறுகிறது. பிற பிள்ளைகளுடன் சேர்ந்து கூட்டணிக்குழுக்களை அமைத்து குழுவாகச் செயற்படவே விரும்புவர். பிள்ளைப்பருவத்தை கூட்டாளிக்குழுப்பருவம் என்றும் கூறலாம்.

**குமரப்பருவம்**

குமரப்பருவத்தினர் ஒப்பார் குழுவின் செல்வாக்கு மிகுந்து காணப்படும். இப்பருவம் சமூகநெறிகள் சமய நெறிகள் ஆகியவற்றிற்குக் காரணமின்றி எதிர்ப்புத் தெரிவித்தலும் அவற்றை வலியுறுத்தும் சமூக அமைப்புக்கு எதிராகச் செயற்படும் புரட்சி இயக்கங்களை ஆதரித்தும், ஒதுங்கி வாழும் மனப்பான்மையின் விளைவாகும். சந்ததி இடைவெளி எழ முக்கியக் காரணம் முதியோர் இளையோர் ஆகியோரிடையே எழும் கருத்து தொடர்பின் குறைபாடாகும். இதனை விடுத்து இருவழிக்கருத்துத் தொடர்பு ஏற்பட்டு சுமகமான நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

**மொழியும் குழந்தையின் வளர்ச்சி நிலைகளும்**

**மொழி :பொருள்**

மொழி என்பது எண்ணங்களை வெளிப்படுத்த மனிதனால் வகுக்கப்பட்ட குறியீடுகளாகும். மொழிக்குறியீடுகள் வாய்மொழி குறியீடுகளாகவோ எழுதப்படும் குறியீடுகளாகவோ இருக்கலாம்.

மொழிக்குறியீடுகள் வளர்ச்சியடைந்து வரிவடிவத்தில் உள்ளன. கருத்தை வெளிப்படுத்தும் வாயில் மொழியாகும். முதலில் அவை சித்திர மொழிகளாகத் தோன்றின. பின்னர் அவை சிக்கனம் எளிமை கருதி செயற்கைக் குறிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன.

**குழவிப்பருவம்:**

குழந்தைகள் ஆரம்பத்தில் சைகை மொழிகள்மூலம் தங்கள் தேவைகளையும் கருத்துகளையும் தெரிவிக்கின்றன. பின்னர் சிறுசிறு சொற்களைக் குழறிப்பேச கற்றுக்கொள்கின்றன. சுமார் 18 மாதக்குழந்தை 10முதல் 12 சிறு எளிய சொற்களைப் பயன்படுத்துகிறது. அடுத்த 3-4 மாதங்களில் அதன் சொற்களஞ்சியத் தொகை வேகமாக அதிகரிக்கத் தொடங்குகிறது.

**பிள்ளைப்பருவம்:**

2-3 வயதிலேயே சிறு வாக்கியங்களை உருவாக்குதல், பன்மைச் சொற்களையும் மறுபெயர்களையும் பயன்படுத்துதல், இறந்த காலம் பற்றி பேசுதல், ஆகியன குழந்தைகளிடத்தில் காணப்படும். 4-5 ஆண்டுகளில் சிக்கலான வாக்கியங்களும் பயன்படுத்தப்படும். எளிய இலக்கணவிதிகளும் பின்பற்றப்படும். இக்காலகட்டத்தில் குழந்தைகள் கேள்விமேல் கேள்வி கேட்டு எதையும் தெரிந்து கொள்ளும் ஆர்வத்தோடு அதிகமாக பேசிக்கொண்டும் இருப்பர்.

**குமரப்பருவம்:**

12 வயதில் குழந்தை சாதாரணமாக 10000க்கும் அதிகமான சொற்களை பேசுவர். 5 வயதிற்குப்பின் குடும்பமும் பள்ளியும் குழந்தையின் மொழித்திறன் வளர்ச்சியை தீவிரப்படுத்துவதன் விளைவாக சொற்களஞ்சிய அளவுப்பெருக்கம், வாக்கியங்களின் நீளம் அதிகரித்தல், உச்சரிப்புத்தெளிவு, படித்துப் புரிந்து கொள்ளும் திறமை அதிகரிப்பு, எழுத்துத்திறன் வளர்ச்சி போன்றவை ஏற்படுகின்றன.

**குழவிப்பருவம் முதல் குமரப்பருவம் வரையிலான ஒழுக்க வளர்ச்சி:**

**கல்வியில் முக்கியத்துவம்:**

**உடல்வளர்ச்சி:**

உடற்கல்வி, உடற்பயிற்சி

**மனவளர்ச்சி:**

கலந்துரையாடல்கள், கவிதைப்போட்டி, பாட்டுப்போட்டி போன்றவற்றில் கலந்துகொள்ளச்

செய்தல்

**மனவெழுச்சி வளர்ச்சி:**

தீவிர மனவெழுச்சியை அடக்குதல் விதிகளை அமல்படுத்த வேண்டும். ஓய்வுநேர வளர்ச்சிசார் செயல்களில் ஈடுபாடு கொள்ளச் செய்தல், மனக்குமுறல்களை ஆற்றுப்படுத்துதல்

**ஒழுக்க வளர்ச்சி:**

நல்லொழுக்கக் கல்வி , பாலியல் கல்வி குமரப்பருவத்தினருக்கு அவசியம். வாழ்க்கையின் தத்துவத்தை வளர்த்தல், ஜனநாயக வழியைப் பின்பற்றுதல், வழிகாட்டுதல், தொழிற்கல்வி.

**வளர்ச்சி சார் செயல்கள்: (Phases of developmental and development tasks)**

ஒவ்வொரு சமுதாயமும் தம் உறுப்பினர்கள் யாவரும்தத்தம் வயதுக்கேற்றவாறு குறிப்பிட்ட திறன்களில் தேர்ச்சியடைதலையும் குறிப்பிட்ட நடத்தைமுறைகளைக் கற்றுத் திகழ்வதையும் எதிர்பார்க்கிறது. இதனை வளர்ச்சிசார் செயல்கள் என்று **ஹேலிகஸ்ட்** என்பவர் கூறுகிறார். வளர்ச்சி சார் செயல்கள் ஒருவனது வாழ்க்கையின் குறிப்பிட்ட வயது அல்லது பருவத்தில் எழுகின்றன. இவற்றை வெற்றியுடன் செய்து முடிப்பது மகிழ்ச்சியையும் இவற்றில் தோல்வி ஏற்பட்டால் மகிழ்ச்சியின்மையும் தோன்றும்.

**பல்வேறு பருவங்களில் வளர்ச்சி சார் செயல்கள்:**

**குழவிப்பருவம்:**

- நடக்கக் கற்றுக்கொள்கிறது.
- திடஉணவுகளை உட்கொள்ள கற்றுக்கொள்கிறது
- பேச கற்றுக்கொள்கிறது
- உடற்கழிவுகளை வெளியேற்றுவதை கட்டுப்படுத்தக் கற்றுக்கொள்கிறது
- பாலின வேறுபாடுகளை கற்றுக்கொள்கிறது
- சமூக மற்றும் பௌதீக எதார்த்தத்தை விவரிக்க கருத்துக்களை உருவாக்குதல் மற்றும் மொழி ஆற்றல் பெறுகிறது.
- படிக்க தயாராகிறது
- உடலின் நிலைத்த தன்மை அடைதல்
- பெற்றோர்கள் உடன் பிறந்தவர்கள் மற்றும் பிறருடன் உணர்ச்சிப்பூர்வமாக தொடர்பு கொள்ளக் கற்றுக் கொள்கிறது.
- சரி தவறுகளை வேறுபடுத்தி அறிய கற்றுக்கொள்வது மற்றும் மனசாட்சியை வளர்ப்பது.

**பிள்ளைப்பருவம்:**

- படித்தல், எழுதுதல், கணக்கிடுதல் ஆகியவற்றிற்கான அடிப்படைத்திறன்களைக் வளர்த்தல்.
- சாதாரண விளையாட்டுகளுக்குத் தேவையான உடற்திறன்களைக் கற்றல்
- ஒத்த வயதினருடன் இணைந்து செயல்படுதல்
- அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான கருத்துகளை உருவாக்குதல்
- மனசாட்சி ஒழுக்கம் மற்றும் மதிப்புகளின் அளவை வளர்ப்பது
- தனிப்பட்ட சுதந்திரத்தை அடைதல்
- சமூகக் குழுக்கள் மற்றும் நிறுவனங்கள் மீதான அணுகுமுறைகளை கற்றல்.

**குமரப்பருவம்:**

- சுதந்திரமாக செயல்படுதல், பால் தொடர்பான மாற்றங்களை ஏற்றுக் கொள்ளுதல்
- பெரியோர்களை மதித்தல்
- ஆண்பால் அல்லது பெண்பால் சமூகப் பாத்திரத்தை அல்லது பங்கினை அடைதல்
- திருமணம் மற்றும் குடும்ப வாழ்க்கைக்கு தயாராகுதல் மற்றும் பொருளாதார வாழ்கைக்கு தயாராகுதல்
- பொருளாதார சுதந்திரத்தை உறுதி செய்தல்
- குடிமைத்திறனுக்கு தேவைப்படும் கருத்தை உருவாக்குதல்
- அறிவுசார் திறன்களை வளர்த்தல்
- தொழில் தேர்வுக்குத் தன்னைத் தயார் செய்தல்
- சமூக மாற்றங்களைப் புரிந்து கொள்ளுதல் போன்றவை இப்பருவத்தில் அடங்கும்.

**முன் முதிர் பருவம்:**

- ✓ வாழ்கைத் துணையை தேர்ந்தெடுப்பது
- ✓ ஆண்பால் மற்றும் பெண்பால் சமூக பாத்திரத்தை அடைதல்
- ✓ துணையுடன் திருமண வாழ்வை வாழ கற்றுக் கொள்ளல்
- ✓ குடும்பத்தை தொடங்குதல்
- ✓ குழந்தைகளை வளர்ப்பது
- ✓ வீட்டை நிர்வகித்தல்
- ✓ தொழில் தொடங்குதல்
- ✓ குடிமை பொறுப்பை ஏற்றுக்கொள்ளல்
- ✓ இணக்கமான சமூகக் குழுவைக் கண்டறிதல்

**நடுத்தர வயது:**

- வயதுவந்தோர்க்கான குடிமை மற்றும் சமூகப் பொறுப்பை அடைதல்
- பொருளாதார வாழ்க்கைத் தரத்தை நிறுவுதல் மற்றும் பராமரித்தல்

- வயது வந்தோர்க்கான ஓய்வுநேர செயல்பாடுகளை உருவாக்குதல்
- உடலியல் மாற்றங்களை ஏற்றுக் கொள்ளுதல்
- வயதான பெற்றோரை அனுசரித்தல்.

**பிற்கால முதிர்ச்சி:**

- உடல் வலிமை மற்றும் ஆரோக்கியம் குறைவதை சரிசெய்தல்
- பணி ஓய்வு மற்றும் குறைக்கப்பட்ட வருமானத்தை சரிசெய்தல்
- சமூக மற்றும் குடியியல் கடமைகளை சந்திப்பது
- திருப்திகரமான உடல் அமைப்பை நிறுவுதல்

…………………………………………………………………………………